**உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் - 2024**

-----------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாகக் காணப்பட்டதுடன், முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்யும் பொறுப்பு தொடர்புடைய தரப்பினரினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணிச் செல்லல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் காணப்படாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் செயற்படுத்தப்பட்டுள்ளது,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 99 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் நிறுவுதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், இது வரை இந்த நிதியம் செய்முறை ரீதியாக நிறுவியிருக்கவில்லை. | - | இணங்குகின்றேன் என. மற்றும் உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் அதுவரை செய்முறை ரீதியாக நிறுவியிருக்கவில்லை என. | சட்டத்தின் பிரிவின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் செய்முறை ரீதியாக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதியம் தொடர்பாக சான்றுபடுத்தப்பட்ட நிதிக்கூற்றுடன் செயலாற்றுகை அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | - | உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் தொடர்பாக மாத்திரம் தனியாக செயலாற்றுகை அறிக்கையொன்று இதற்கு முன்னர் சமர்ப்பித்திருக்காமையால் அதனை 2024 ஆண்டு சமர்ப்பிப்பதற்கு முடியாமல் போனது என. மற்றும் 2025 ஆண்டிற்காக சமர்ப்பிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயலாற்றுகை அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2.41 மில்லியனிற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6.99 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 4.58 மில்லியனிற்கான இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. அந்த பின்னடைவிற்கு முன்னைய ஆண்டில் ரூபா 36.84 மில்லியனிற்கான தேநீர்ச் செலவு மீளாய்வாண்டின் போது ரூபா 57.06 மில்லியன் தொகை வரை 55 சதவீத்தினால் அதிகரித்தலும், அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் கடன் வைப்புக்களில் ரூபா 36.72 மில்லியன் தொகை மீண்டும் திறைசேரிக்கு மாற்றப்பட்டமையால் வைப்பு வட்டி வருமானம் ரூபா 1.30 மில்லியனிலிருந்து ரூபா 0.84 மில்லியன் வரை 35 சதவீதத்தினால் குறைந்திருத்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்திற்கு திறைசேரியிலிருந்து அவ்வப்போது கிடைத்த பணத்தில் ரூபா 2.5 மில்லியன் தொகையினை பயன்படுத்தி உள்நாட்டு இறைவரிச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு வீடமைப்புக் கடன் வழங்குவதற்காக வீடமைப்புக் கடன் நிதியம் ஒன்று அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் நிறுவியிருந்தது. அந்த வீடமைப்புக் கடன் நிதியத்தில் 2024 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கடன் மீதியில் ரூபா 36.72 மில்லியன் தொகை திறைசேரிக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், அதன்படி, கடன் நிதியத்தின் தற்போதைய மீதி ரூபா 5.57 மில்லியன் தொகையாக காணப்பட்டது. கடன் நிதியத்தின் மூலம் 15 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 14.10 மில்லியனிற்கான கடன் தொகையில் 2024 திசெம்பர் 31 திகதி அளவில் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 3.88 மில்லியன் தொகையாக காணப்பட்டது. கடன் நிதியத்திலிருந்து இறுதியாக | ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 2011 இன் பின்னர் உத்தியோகத்தர்கள் கடன் விண்ணப்பம் சமர்ப்பித்திருக்காமையால் இந்தத் திட்டம் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாத நிலைமை ஒன்று காணப்பட்டதுடன், நிறுவாகத் தீர்மானம் ஒன்றின் மீது உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் நடாத்திச் செல்லப்படுகின்ற வீடமைப்புக் கடன் வைப்புத் தொகையில் 2024 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மீதியில் ரூபா 36.72 மில்லியன் தொகையொன்று திறைசேரி பிரதிச் செயலாளர் இலங்கை வங்கி தப்ரபேன் கிளையின் 2026450 இலக்கம் கொண்ட கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது என. | கடன் நிதியம் நிறுவப்பட்ட குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர் ஒருவருக்கு 2011 ஆண்டிலே இறுதியாக கடன் வழங்கப்பட்டிருந்தது. அத் திகதியிலிருந்து இதுவரை 13 வருடங்களுக்கு மிகையான காலம் இந்தக் கடன் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியுடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையின் படி ரூபா மில்லியனொன்றிற்கான உச்சமட்ட தொகையொன்று விண்ணப்பிப்பதற்கு இயலுமாக உள்ளது விண்ணப்பதாரிக்கு அல்லது வாழ்க்கைத் துணைக்கு அல்லது தங்கி வாழும் பிள்ளைகளுக்கு காணியொன்று அல்லது வீடொன்று காணப்படாத சந்தர்ப்பத்தில் மாத்திரமே. அதேபோல், இந்தக் கடன் தொகையை பெறுவதன் மூலம் அரச ஏனைய ஆதனக் கடன் திட்டங்களின் கீழ் ஆதனக் கடன் பெற்றுக்கொள்வதற்கு ஏதேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு காணப்படும் சந்தர்ப்பம் இழக்கப்படுவதனால், ஏனைய மிகவும் அனுகூலமான கடன் திட்டங்களுக்கு உத்தியோகத்தர்கள் தொடர்பு கொள்வதன் காரணமாக கடந்த 13 வருடங்களை விட மிகையான காலம் முதல் வீடமைப்பு கடன் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கிடைத்திருக்கவில்லை. இதன் காரணமாக திணைக்களத்தினால் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியுடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் தேவையானவாறு மீளாய்வு செய்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்களிடம் வீடமைப்புக் கடன் விண்ணப்பங்கள் கிடைத்திருக்காமையால் மற்றும் மீண்டும் கடன் விண்ணப்பங்கள் அழைத்தல் மேற்கொள்ளப்படாமையால் வீடமைப்புக் கடனிற்காக நிறுவப்பட்ட வைப்புக் கணக்கினை முடிவுறுத்துவதற்காக அதன் மீதியில் ரூபா 36.72 மில்லியன் தொகையொன்று திறைசேரியின் பிரதிச் செயலாளர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு வைப்பினை முடிவுறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியுடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையில் காணப்படும் நிபந்தனைகளை மீண்டும மீளாய்வாய்வு செய்யும் தேவைப்பாடொன்று காணப்படவில்லை என. | கடன் நிதியம் நிறுவப்பட்ட குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |